செ.வெ.எண்: 37 நாள்:21.01.2018

# அரியலூர் மாவட்டத்தில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம் 22.02.2018 அன்று நடைபெறுகிறது

அரியலூர் மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக **எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம்,** **உடையார்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில்,** மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தலைமையில் 22.02.2018 (வியாழக்கிழமை) 03.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து எண்ணெய் நிறுவனங்களின் பிரதிநிதிகள், எரிவாயு முகவர்கள் கலந்துகொள்ள உள்ளனர். எரிவாயு நுகர்வோர்கள், சமையல் எரிவாயு தொடர்பான குறைகள் இருப்பின் இந்த குறைதீர் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களது குறைகளையும், ஆலோசனைகளையும் தெரிவித்து பயனடையுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.